# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 007/மா/2019
ஆணை நாள்: 17–2–2020

திரு. இரா. சீனிவாசன்,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
மதுரை மாநகராட்சி மற்றும்
உதவி ஆணையர், மண்டலம் - 3,
மதுரை மாநகராட்சி – எதிர் மனுதாரர்கள்

மதுரை, மாநகராட்சி, புதுராம்நாட் ரோடு, புது மீனாட்சி நகர், பாத்திமா ஜின்னா தெரு, எண்.56/1A என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா. சீனிவாசன் என்பவரது 11.01.2019 நாளிட்ட முறையீட்டு மனு 18.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண்.007/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது 11.01.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், மதுரை மாநகராட்சி மண்டலம் -03, வார்டு – 54, புது மீனாட்சி நகர், பாத்திமா ஜின்னா தெரு, கதவு எண். 56/1A மனை வீடு வகையறா தனக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண். 98287-ன்படி அரையாண்டு வரியாக ரூ.499/- என வரிவிதிக்கப்பட்டு நிலுவையின்றி செலுத்தி வருவதாகவும், தனது வீடு அமைந்துள்ள பகுதி புது இராமநாதபுரம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 01.4.2011 முதல் 72 வார்டுகளில் இருந்து 100-வார்டுகளாக திருத்தி அமைந்த நிலையில் புது இராமநாதபுரம் ரோடு விஸ்தரிப்பு என்ற பெயரை நீக்கம் செய்து, தங்கள் தெருவிற்கு பாத்திமா ஜின்னா தெரு என்றும், மண்டலம் D பிரிவிலும் வரியை நிர்ணயிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஏற்கனவே மதுரை மாநகராட்சியில் 01.04.2011 முதல் வெளியிடப்பட்டுள்ள தெருக்குறியீடு அடிப்படையில் D பிரிவில் 01.10.2017 முதல் வரியை திருத்தி வரிவிதிப்பிற்கு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 31.01.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மதுரை மாநகராட்சி, 3வது மண்டல அலுவலர் தனது 27.11.2019 நாளிட்ட அறிக்கையில் கணினியில் பதிவு செய்ய மாநகராட்சி ஆணையிரிடம் அனுமதி கோரப்பட்டது என்றும், அனுமதி கிடைக்கப்பெற்றதும் கணினியில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 19.9.2019 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் 11.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது, அதன்படி முறையீட்டு மனுதாரர் 11.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மதுரை மாநகராட்சி 2011 ஆம் ஆண்டு 72 வார்டுகள் 100-வார்டுகளாக பிரிக்கப்பட்டது என்றும், தங்கள் வார்டு 52 ஆக இருந்தது 54-ஆக மாறிவிட்டது என்றும், தனது வீடு உள்ள தெரு, பாத்திமா ஜின்னா தெரு என கணினியில் பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது என்றும், உரிய முறையில் பதிவேற்றம் செய்ய ஆணையருக்கு உத்தரவிட கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 19.9.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி மதுரை மாநகராட்சி 3வது மண்டல அலுவலர் 11.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் முறையீட்டு மனுவில் தெரிவித்திருந்தபடி பாத்திமா ஜின்னா தெரு என்ற பெயரை கணினியில் பதிவு செய்வதற்கு இம்மாதம் மாமன்ற தீர்மானத்தில் வைத்து அறிக்கை சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி 3வது மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மண்டல அலுவலரின் அறிக்கை ஏற்கப்பட்டது. மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளபடி இம்பொருள் சம்மந்தமாக மாமன்ற தீர்மானம் பெற்று கணினியில் தெருவின் பெயரினை மாற்றம் செய்ய உரிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி 3வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. இரா. சீனிவாசன்,
   56/1A, பாத்திமா ஜின்னா தெரு,
   புது மீனாட்சி நகர்,
   புது ராம்நாட் ரோடு, மதுரை – 625 009.

2. உதவி ஆணையர்,
   மண்டலம் - 03,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை – 9.

3. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   மதுரை - 2.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்